# ஆய்வுப்பொருள்: இரண்டு:-
# இறையருளை வழங்கும் அருளடையாளங்கள்

14

## 2.6. இயேசுவின் பணியைத் தொடர்ந்து ஆற்றும் குருக்கள்



குருவானவர் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இடைநிலையாளராக உள்ளார். குருக்கள் இறைவனால் தெரிவுசெய்யப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்ட குழுவினரை (கோத்திரம்) பழைய ஏற்பாட்டிலிருந்து நாம் அறிந்து கொள்கிறோம். பழைய ஏற்பாட்டில் முதல் தடவையாகக் குறிப்பிடப்படும் குரு மெல்கிசெதேக் ஆவார்.

அப்பொழுது சாலேம் அரசர் மெல்கிசெதேக்கு அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்தார். அவர் 'உன்னத கடவுளின்' அர்ச்சகராக இருந்தார். அவர் ஆபிராமை வாழ்த்தி, "விண்ணுலகையும் மண்ணுலகையும் தோற்றுவித்த உன்னத கடவுள் ஆபிராமிற்கு ஆசி வழங்குவாராக"....

(தொ.நூ. *14:18-20*)



இலவச விநியோகத்திற்காக

பழைய ஏற்பாட்டில் குருக்கள் ஆலயத்தில் தூய்மையைக் காக்க வேண்டும். இறைவன்முன் மக்களையும், மக்கள்முன் இறைவனையும் பிரசன்னப்படுத்தும் நடுவராக இருத்தல் ஒரு குருவின் முதன்மையான பணியாகும். உதாரணமாக,

1. மக்களுக்கு இறைவனின் ஆசீரைக் கூறினர். எண்ணிக்கை 6:22-27.
2. இறைவனின் சட்டத்தை மக்களுக்குப் போதித்தனர். இணைச்சட்டம் 33:11, 2குறிப்பேடு 17:7-9.
3. எருசலேம் ஆலயத்தில் காணிக்கை ஒப்புக்கொடுத்தனர். லேவியர் 9:4.

பழைய ஏற்பாட்டில் குருக்களின் பணிகள் குறையுள்ளதாகவே இருந்தன. புதிய ஏற்பாட்டில் இப்பணிகள் கிறிஸ்துவில் முழுமையடைந்தன. அவரது குருத்துவம் முடிவில்லாதது.

நமக்கு முன்னோடியாய் அந்தத் திரைச்சீலையைக் கடந்து இயேசு அங்கு சென்று சேர்ந்திருக்கிறார். மெல்கிசதேக்கு முறைப்படி என்றென்றும் தலைமைக்குரு என்னும் நிலையில் நம் சார்பாக அவர் அங்கு சென்றிருக்கிறார்.

(எபி. 6:20)

இவரைப் பற்றி, ‘மெல்கிசதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே’ என்னும் சான்று உரைக்கப்பட்டுள்ளது.

(எபி. 7:17)

எனவே, வானங்களைக் கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக்கொள்வோமாக!

(எபி. 4:14)



இலவச விநியோகத்திற்காக

புதிய ஏற்பாட்டிலே உலகின் பாவங்களைப் போக்குகின்ற கிறிஸ்து தமது பாடுகள், மரணம், உயிர்ப்பின் மூலமாக இழந்துபோன இறை - மனித உறவைப் பெற்றுத்தர எமக்காகக் குருவும், பலிப்பொருளும் ஆனார். பரலோக பீடத்தில் நித்திய குருவாக நின்று தந்தைக்குப் புகழ் செலுத்துகிறார். கிறிஸ்து தமது குருத்துவப் பணியைத் தம் அப்போஸ்தலர்களுக்கும், அவர்களின் வழிவந்தோரான குருக்களுக்கும் அளித்துள்ளார். திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவோடு ஒன்றுபட்ட யாவரும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குபெறுகின்றனர். திருச்சபை இருநிலைகளில் குருத்துவப் பணியை ஆற்றுகின்றது.

### பொதுக்குருத்துவம்

இறைவன் வெவ்வேறு மக்களை வெவ்வேறான நிலைக்கும், பணிக்கும் அழைக்கின்றார். கிறிஸ்து கொடுக்க விரும்பிய அளவிற்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டது. ஆகையால் தான், அவர் தம் 'கொடைகளை' அருளிச் சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியின் தூதுவர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார். எனவே, ஒவ்வொருவரும் தங்களுக்கு இறைவன் அளித்துள்ள கொடைகளைப் புதைத்து வைக்காது, அவற்றை நல்லமுறையில் பயன்படுத்தி, இறைவனுக்கு புகழ்பாட வேண்டும். குடும்பத்தின் தந்தை அக்குடும்பத்தின் முதல் குருவாக உள்ளார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காக மன்றாடும்போதும், ஆன்மீக காரியங்களைக் கற்றுத்தரும்போதும், கணவனும் மனைவியும் இன்ப துன்பத்தில் தம்மை மறந்து பிறரன்போடு வாழும்போதும் கிறிஸ்துவின் மறைபொருளைத் தொடர்ந்து செய்யும் குருக்களாகத் திகழ்கின்றனர்.

### பணிக்குருத்துவம்

இறைமக்களிடையே இருந்து, இறைவனுடைய நற்செய்தியைப் போதிக்கும்படி சிலர் சிறப்பு அழைப்பும், பணியும் பெறுகின்றார்கள். அப்போஸ்தலர்களின் மரபில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதன் மூலம் கிறிஸ்துவின் குருத்துவ அதிகாரத்தையும், குருத்துவத்திற்கு ஏற்ற வாழ்வு வாழவும், பிறருக்குப் பணி செய்யவும், தேவையான வரத்தைப் பெற்றுக்கொள்கிறார். குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர் திருப்பலியை நிறைவேற்றவும், திருவருட்சாதனங்களை நிறைவேற்றவும் கிறிஸ்துவிடம் இருந்து அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

உதாரணம்: யூதாசுக்கு பதிலாக மத்தியா சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

தி.ப 1:24-26



இலவச விநியோகத்திற்காக


**திருப்பட்டங்கள் மூன்று வகைப்படும்**



ஆயர் நிலை



குருத்துவ நிலை



திருத்தொண்டர் நிலை

யூதாசுக்குப் பதிலாக மத்தியா தேர்ந்து கொள்ளப்பட்டமை புதிய ஏற்பாட்டில் பணிக்குருத்துவம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டதென்பதை உறுதிப்படுத்துகின்றது.

| ஆயர்களின் பணி (க.தி.ம. 1554-1561) | குருக்களின் பணி (க.தி.ம. 1562-1568) | திருத்தொண்டர்களின் பணி (க.தி.ம. 1589) |
|---|---|---|
| - கற்பித்தல்.<br>- திருச்சபையை நிர்வகித்தல்.<br>- இறைமக்களைத் தூய்மை யாக்கல்.<br>- அருளடையாளங்களை வழங்குதல். | - நற்செய்தி அறிவித்தல்.<br>- நல்ல ஆயனாக வழிநடத்தல்.<br>- திருவழிபாட்டை நடாத்தல்.<br>- மறைக்கல்வி வழங்குதல்.<br>- குருத்துவம் தவிர ஏனைய அருளடையாளங்களை வழங்குதல். | - இறைவார்த்தையை விளக்குதல்.<br>- திருமுழுக்கு வழங்குதல்.<br>- நற்கருணையை வழங்குதல்.<br>- ஆயருக்கும் குருவுக்கும் உதவி செய்தல். |

குருத்துவம் பெற இருப்பவர்களின் தலைமேல் கையை வைத்துச் செபிப்பதன் மூலம் குருத்துவம் என்ற அருளடையாளம் வழங்கப்படுகின்றது.

குருக்களை நாம் மறைமாவட்டக் குருக்கள் என்றும், துறவற சபைக் குருக்கள் என்றும் வகைப்படுத்தலாம்.



இலவச விநியோகத்திற்காக

திருமுழுக்கு வழியாக
குருத்துவ, பொதுநிலையினர் என்ற அழைப்பை
பெற்றவர்கள் உள்ளனர்.
அவர்கள் அனைவரினதும் பிரதான இலக்கும், நோக்கும்
புதிய ஏற்பாட்டின் உன்னத குருவான இயேசுக்கிறிஸ்து தம்
வாழ்க்கைப் பலியில்
தமக்கு வழங்கியிருக்கும் நிலையில்லா வாழ்வின்
மகிமை, அன்பு, பரித்தியாகம் ஆகிய பண்புகளில் நிறைவு
காண்பதாகும்.
வாழ்வின் எவ்வித அழைப்பு பொற்றிருந்தாலும் இவற்றை
நிறைவு செய்வதற்கு தடைகள் ஏதும் இல்லை.

**உமது கவனத்திற்கு :**

- எனது அழைப்பு என்ன?
- குருத்துவ, துறவியர்களின் பணிகளைத் தேடி அறிந்து கொள்ளுங்கள்.
- பங்கினுள் பொதுநிலையினரின் பங்களிப்பு எத்தகையது?

**செயற்பாடு**

1. புதிய ஏற்பாட்டில் மேன்மையான குருவாக விளங்கிய கிறிஸ்துவின் வாழ்வில் காணக்கூடிய பத்து பண்புகளை எழுதுக.
2. பொதுக் குருத்துவத்தினுள் பொதுநிலையினரின் பொறுப்புக்கள் 5 எழுதுக.
3. உமது பங்குத்தந்தையைச் சந்தித்து அவரது பணிகளைக் கேட்டு எழுதுக.


இலவச விநியோகத்திற்காக

**மேலதிக அறிவுக்காக:**

கிறிஸ்தவ விசுவாசிகள் குருக்கள், பொதுநிலையினர் என இருவகைப்படுகின்றனர்.
(திருச்சபைச் சட்டத்தொகுப்பு # 207)

இவர்களுள் துறவற வார்த்தைப்பாடுகள் வழியாக தமது வாழ்வை அர்ப்பணித்தவர்களும் உள்ளனர். இவர்கள் துறவற சபைகளைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறாக,

- **கிறிஸ்தவ விசுவாசிகள்**
  - **பொதுநிலையினர்**
    - **துறவிகள்**
    - **துறவிகள் அல்லாதோர்**
  - **குருக்கள்**
    - **துறவற குருக்கள்**
    - **மறைமாவட்டக் குருக்கள் (துறவிகள் அல்லாதோர்)**

**ஞான மேய்ப்பர்களுக்கு நாம் செய்ய வேண்டிய உதவிகள்**

- அவர்களுக்காகச் செபிப்பது.
- அவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்வது.
- பங்குப் பணியில் அவர்களுக்கு உதவி செய்வது.
  உ.ம் - பங்குப் பேரவை, பாடகர்குழு, அலங்காரக்குழு மற்றும் ஆலயப்பணிக்குழு
- தேவைப்பட்டால் அவர்களுக்கு பொருளுதவியும் செய்ய நமக்குக் கடமை உண்டு.
- நமது திருச்சபையின் மேன்மையை மக்கள் புரிந்து கொள்ள குருக்கள். செய்யும் ஏற்பாடுகளுக்கு துணை செய்தல்.
- ஞாயிறு மறைக்கல்வி கற்றுத்தர முன்வருதல்.
- பீடப்பணியாளரை உருவாக்குதல்.
- இளைஞர்கள் ஒன்றிணைந்து செபக்குழு அமைத்து இறைவார்த்தையைப் பகிர்தல்.
- பக்திச் சபைகள் வழியாக மக்களை முழுமையான விசுவாச வாழ்க்கைக்கு அழைத்துச் செல்வது.
- அன்பியங்கள் நடத்த முன்வருதல்.
- திருப்பலி சிறப்பாக அமைய உதவுதல். (திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள்)